[30th October 1958

Salaries of University teachers

* 702 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any grants were received from the Union Government for increasing the salaries of University teachers in 1956–57 and 1957–58;

(*b*) if so, the amount received for each of the two years; and

(*c*) whether the entire amounts were already spent for the purpose?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

Sri M. JAGANNATHAN : Sir, if the information for my question regarding the receipt of any grants from the Union Government for the years 1956–57 and 1957–58, is not available . . .

Mr. SPEAKER : The answer si 'No'.

Sri M. JAGANNATHAN : Then I do not put the question.

Sri K. VINAYAKAM : Did not the University Grants Commission recommend better scales of pay for University teachers? What steps have been taken by the State Government to have it implemented at least in the colleges owned by the State Government?

The Hon. Sri C. SUBRAMANIAM : This question relates to 1956–57 and 1957–58 and I said that no grant was received during that period. Now during the current year, the University Grants Commission have come forward with an offer to give 50 per cent for increasing the scales of pay of the University teachers. The matter is under consideration.

Sri M. KALYANASUNDARAM : சர்க்காரால் நடத்தப்படும் கல்லூரிகளில் இருக்கக்கூடிய ஆசியர்களுக்கு மட்டும் சம்பள உயர்வு கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் நிதி அளித்திருக்கிறார்களா? இதேமாதிரி மற்ற கல்லூரிகளில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வு கொடுப்பதற்கு மத்திய சர்க்கார் நிதி உதவி அளிப்பார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : தனிப்பட்ட காலேஜ்களுக்கு மட்டும்தான் இந்த உதவியை அளிப்பதற்கு யுனிவர்ஸிடி கிராண்ட்ஸ் கமிஷன் முன் வந்திருக்கிறது. சர்க்கார் காலேஜ்களுக்கு எந்தவிதமான உதவியும் அவர்களிடமிருந்து இன்னும் வரவில்லை.

Harijan colonies affected by seepage from the Lower Bhavani channel.

* 703 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

ஈரோடு டெவலப்மெண்டு ஸ்பெஷல் கலெக்டர் 1955-ம் வருஷம் அக்டோபர் மாதம் 6-ம்தேதி எழுதிய கடிதத்திலே லோயர் பவானி சமுதாய நலத் திட்டப் பிரதேசத்திலே லோயர் பவானி வாய்க்காலில் நீர்க் கசிவினால் எந்தெந்த ஹரிஜன சேரிகளில் எத்தனை வீடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன?

LIBRARY 4 JUL 1959 LEGISLATURE MADRAS

30th October 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU: A statement showing the particulars, is placed on the table of the House. In respect of all the cases contained in the statement rehabilitation proposals are in progress.

SRI P. G. MANICKAM : இந்த ஜாபிதாவிலே தெரிவிக்கப்பட்டிருக்கும் ஹரிஜன சேரிகளிலே இன்னும் பல சேரிகளில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை. இந்த ஜாபிதாவில் தெரிவிக்கப்படாத இன்னும் அநேக சேரிகளும் இருக்கின்றன. கீழ்பாவானி சமுதாய நலத் திட்டம் முடிந்து விட்டது. சேரிகளிலே வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எந்தெந்த இலாக்காக்கள் மூலம் எடுக்கப்பட்டு வருகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பூராவும் முடியவில்லை. இன்னும் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். என்னென்ன வேலைகள் என்றால்,

'Provision of house-sites to the affected families by rehabilitating them in the natham porambokes or by acquiring patta lands at the cost of the Government and by providing house-sites at the rate of 5 cents for each family, grant of cash subsidy of Rs. 100 for each of the affected families and the grant of palmyra trees subject to a maximum of three trees per family on collection of one-fourth of the seigniorage rates'.

SRI P. G. MANICKAM : இவைகளுக்கு கொடுக்கப்படும் தொகையானது எந்தெந்த அதிகாரிகள் மூலம் விநியோகிக்கப்படுகின்றன. இந்த விவரங்கள் எங்களுக்குத் தெரியாமல் இருப்பதனால் கனம் அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : முக்கியமாக ரெவின்யூ டிபார்ட்மெண்டு மூலமாகக் கொடுக்கலாம். ஹரிஜன இலாகா மூலமாகக் கொடுக்கலாம். எந்தெந்த டிபார்ட்மெண்டு மூலமாகக் கொடுத்தால் அது சீக்கிரம் சௌகரியமாக பட்டுவாடா செய்யப்படுமோ, அந்த வகையில் செய்யலாம்.

Ayahs in the Maternity Centres

* 704 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சமுதாய நல திட்டத்தின் கீழ் உள்ள பிரசவ விடுதிகளில் மருவத்துவச்சிகளுக்கு உதவியாக ஆயாக்கள் உண்டா ?

(ஆ) இல்லையென்றால், ஏன் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சமுதாய நலத் திட்ட பிரதேசங்களில் உள்ள பிரசவ விடுதிகளில் ஆயாக்கள் இல்லாத காரணத்தினால், நல்ல முறையில் அங்கு காரியங்கள் நடைபெறவில்லை. ஆகவே, இந்த இடங்களில் ஆயாக்களை நியமிப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

MR. SPEAKER : ஆயாக்கள் இருக்கிறார்கள் என்பதுதான் பதில்.

Printed as Appendix II on pages 180–181 *infra*.